ந.க.8972/2021/அ3 மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாள் 3.12.2021 மயிலாடுதுறை.

அறிவிப்பு

மயிலாடுதுறை மாவட்ட வருவாய் அலகில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காலியாக உள்ள 12 அலுவலக உதவியாளர் காலி பணியிடங்கள் கீழ்கண்ட இனசுழற்சி முறையில் நிரப்பப்பட உள்ளது.

| வ. எண் | இன சுழற்சி | வகுப்பு | முன்னுரிமை / முன்னுரிமையற்றவர் | பொது/ மகளிர் | விதவை/முன்னாள் இராணுவத்தினர் /மாற்றுத்திறனாளி |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | பொதுப்போட்டி - GT | முன்னுரிமை உள்ளது | பொது | - |
| 2 | 2 | ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்) - SC(A) | முன்னுரிமை உள்ளது | மகளிர் | ஆதரவற்ற விதவை |
| 3 | 3 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர்– MBC/DNC | முன்னுரிமை உள்ளது | பொது | - |
| 4 | 4 | பிறபடுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) - BC | முன்னுரிமை உள்ளது | பொது | - |
| 5 | 5 | பொதுப்போட்டி - GT | முன்னுரிமை இல்லாதது | மகளிர் | ஆதரவற்ற விதவை |
| 6 | 6 | ஆதிதிராவிடர் - SC | முன்னுரிமை இல்லாதது | பொது | - |
| 7 | 7 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் MBC/DNC | முன்னுரிமை இல்லாதது | மகளிர் | ஆதரவற்ற விதவை |
| 8 | 8 | பிறபடுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) - BC | முன்னுரிமை இல்லாதது | மகளிர் | ஆதரவற்ற விதவை |
| 9 | 9 | பொதுப்போட்டி - GT | முன்னுரிமை இல்லாதது | பொது | - |
| 10 | 10 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) - BC | முன்னுரிமை இல்லாதது | பொது | - |
| 11 | 11 | பொதுப்போட்டி - GT | முன்னுரிமை இல்லாதது | பொது | - |
| 12 | 12 | ஆதிதிராவிடர் - SC | முன்னுரிமை இல்லாதது | மகளிர் | ஆதரவற்ற விதவை |

இப்பணியிடத்திற்கு கல்வித்தகுதி 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 1.7.2021-ல் 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள். ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர்(அருந்ததியினர்) ஆகியோருக்கு அதிகபட்ச வயதாக 37 வயதும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர்/பிற்படுத்தப்பட்டோர்(முஸ்லீம்) ஆகியோருக்கு 34 வயதும், இதர வகுப்பினருக்கு 32 வயதும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களது சுயவிவரம், கல்வித்தகுதி சான்றுகள், குடும்ப அட்டை, ஆதார் அட்டை, சாதிச்சான்றிதழ், வருமானச்சான்றிதழ், இருப்பிடச்சான்றிதழ் மற்றும் வேலை வாய்ப்பக பதிவு விபரம் ஆகியவற்றின் நகல்களுடன், விண்ணப்பதாரரின் சுய விலாசம் எழுதப்பட்ட ரூ.25/-க்கான முத்திரை வில்லை ஒட்டப்பட்ட 25*10 செ.மீ. அளவுள்ள உறை ஆகியவற்றுடன் விண்ணப்பத்தினை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ எதிர்வரும் 22.12.2021 மாலை 5.45 மணிக்குள் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவருக்கு கிடைக்கத்தக்க வகையில் அனுப்பி வைத்திட வேண்டும். அதற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அரசின் அடிப்படை பணியாளர் பணியமைப்பு விதிகளின்படி தகுதியான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியான விண்ணப்பதாரர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள் என மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. இரா. லலிதா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

06/12/21.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
மயிலாடுதுறை.

6/12/21